**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

செ.வெ.எண்: 166 நாள் : 23.10.2018

**மாநகராட்சிகள், நகராட்சிகள், பேரூராட்சிகள் மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் எடுக்கப்பட்டு வரும் டெங்கு மற்றும் தொற்று நோய் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திருஎஸ்.பி.வேலுமணி அவர்கள் ஆய்வு.**

******

நகர்ப்புர மற்றும் ஊரக உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் டெங்கு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள், குறித்து மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள் மற்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதார துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் ஆகியோர் தலைமையில் இன்று (23.10.2018) சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய தலைமை அலுவலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்கள், தமிழகத்தில் எதிர்வரும் பருவ மழைக் காலத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி உட்பட 12 மாநகராட்சிகள், 124 நகராட்சிகள், 528 பேரூராட்சிகளில் மற்றும் ஊரகப் பகுதிகளில் டெங்கு மற்றும் தொற்று நோய்கள் ஏற்படாமல் தடுக்க எடுக்கப்பட்டு வரும் முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டு துறை அலுவலர்களுக்கு கீழ்கண்டுள்ள அறிவுரைகளை வழங்கினார்.

- ❖ அனைத்து மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகள் பகுதிகளில் காலை 6 மணிக்கு அலுவலர்கள் நேரில் சென்று துப்புரவுப் பணிகளை ஆய்வு செய்து கொசு உற்பத்தியாகும் ஆதாரங்களை முற்றிலுமாக அழிக்க வேண்டும்.
- ❖ சுகாதாரமான குடிநீரை அன்றாடம் விநியோகம் செய்யப்பட்டு கணினி வழி கண்காணிக்கப்பட வேண்டும். குடிநீரில் குறைந்தபட்ச குளோரின் அளவு 0.2 பிபிஎம் ஆக இருப்பதை உறுதி செய்ய வேண்டும்.
- ❖ திறந்த நிலை கிணறுகள் போன்ற நீராதாரங்களில் குளோரின் சேர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். குடிநீர் தேக்க தொட்டிகள் மற்றும் மேல்நிலை தொட்டிகளை சுத்தமாகப் பராமரிக்க வேண்டும்.
- ❖ வீடுகள் மற்றும் பொது இடங்களில் கொசுக்கள் உற்பத்தியாவதற்கு காரணமான டயர், தேங்காய் சிரட்டை போன்ற தேவையற்ற பொருட்கள் அகற்றப்பட வேண்டும். மேலும், திறந்த நிலை தொட்டிகளில் தண்ணீர் தேங்காத வண்ணம் பார்த்துக் கொள்ள வேண்டும்.
- ❖ கொசு உற்பத்தியாகும் ஆதாரங்களை முறைப்படி பணியாளர்களை ஈடுபடுத்தி முற்றிலுமாக அழிக்க வேண்டும்.
- ❖ தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளிலும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள வீடுகளின் உள்ளேயும், வெளியேயும் புகை அடித்தல் மற்றும் கொசு மருந்து தெளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.
- ❖ புகை அடிக்கும் இயந்திரங்கள் போதுமான அளவில் உள்ளதை உறுதி செய்ய வேண்டும். கூடுதலாக தேவைப்படின் உடனடியாக கொள்முதல் செய்யப்பட்டு அவற்றை முழுமையாக பயன்படுத்த வேண்டும்.

- ❖ கொசு மருந்தின் தரம் அங்கீகரிக்கப்பட்ட ஆய்வுக் கூடங்களில் பரிசோதிக்கப்பட்டு முழுமையாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். கொசு முட்டை மற்றும் கொசு புழுக்களை அழித்திடத் தேவையான அளவு மருந்தினை இருப்பில் வைத்துக் கொள்ள வேண்டும்.

- ❖ மாநகராட்சி பகுதிகளிலும் அதனை ஒட்டியுள்ள உள்ளாட்சி அமைப்புகளிலும் உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்களில் உள்ள மேல் மாடிகளில் கொசுக்கள் உற்பத்திக்கு வழிவகுக்கும் வகையிலான தேவையற்ற பொருட்களை மாநகராட்சி / உள்ளாட்சி அமைப்பு பணியாளர்களைக் கொண்டும் தற்காலிகப் பணியாளர்களைக் கொண்டும் அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- ❖ அனைத்து நகர்ப்புர உள்ளாட்சி அமைப்பு பகுதிகளில் உள்ள காலியிடங்கள் மற்றும் தனியார் மனைகளில் தேங்கிக் கிடக்கும் குப்பை மற்றும் தேவையற்ற பொருட்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- ❖ நீர்நிலைகளில் உள்ள ஆகாயத் தாமரைகள் முழுமையாக அகற்றப்பட வேண்டும். மழைநீர் வடிகால்களை தினமும் சுத்தப்படுத்தி வடிகாலில் கழிவு நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும் கொசு ஒழிப்பு மருந்தை சரியான கால இடைவெளியில் தெளிக்க வேண்டும்.

- ❖ தொற்று நோய்களைப் பரப்பும் ஏ.டி.எஸ். கொசுக்களை முழுமையாக ஒழிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.தண்ணீர் தேங்கி நிற்கும் பகுதிகளிலும், குடியிருப்புப் பகுதிகளில் உள்ள வீடுகளின் உள்ளேயும், வெளியேயும் புகை அடித்தல் மற்றும் மருந்து தெளித்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

- ❖ மகளிர் சுய உதவி குழு உறுப்பினர்கள், பள்ளி / கல்லூரி மாணவர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோரை கொண்டு பொது மக்களிடம் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டு பிரசுரங்கள் வழங்குதல், ஊர்வலம், தகவல் கல்வி மற்றும் தொடர்பு ஆகிய முறைகளை பயன்படுத்தி விழிப்புணர்வு பிரச்சாரங்கள் செய்து தொற்று நோய் ஒழிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். மேலும், டெங்கு காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவுவதை தடுக்க பொது மக்களுக்கு நிலவேம்பு குடிநீர் வழங்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

- ❖ டெங்கு ஒழிப்பு குறித்த குறும்படங்கள் மாநகராட்சிகள் / நகராட்சிகள்/ பேரூராட்சிகள் / ஊராட்சிகளில் ஒளிப்பரப்ப நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

- ❖ உள்ளாட்சித்துறை, சுகாதாரத்துறை அலுவலர்கள் மற்றும் மருத்துவ அலுவலர்கள் பல்வேறு டெங்குக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளில் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும்.

- ❖ காய்ச்சாலால் பாதிக்கப்பட்ட நோயாளிகள் குறித்த விவரங்கள் அந்தந்த மாநகராட்சி, நகராட்சி நல அலுவலர்கள் மற்றும் அந்தந்த சுகாதாரத் துறை துணை இயக்குநர் அலுவலகத்திற்கு உடனுக்குடன் தெரிவிக்கப்பட வேண்டும்.

- ❖ அதே போல் சுகாதாரத் துறை துணை இயக்குநர்களிடம் இருந்து காய்ச்சல் கண்டவர்களின் பட்டியல் பெற்று அப்பகுதிகளில் தீவிர தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

- ❖ தொற்று நோய் பாதிப்புகள் அறியப்பட்டுள்ள இடங்களில் மேற்படி நடவடிக்கைகள் சுகாதார துறை அலுவலர்களுடன் இணைந்து சிறப்பு குழுக்கள் அமைத்து போர்க்கால அடிப்படையில் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சுகாதார துறை சார்பில் தயாரிக்கப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கான டெங்கு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வு கையேட்டினை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களும் மாண்புமிகு சுகாதார துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் அவர்களும் வெளியிட, அதனை திருவள்ளுர் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார் இ.ஆ.ப., அவர்களும், காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பொன்னையா இ.ஆ.ப.,., அவர்களும் பெற்றுக் கொண்டார்கள்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு பாடநூல் தலைவர் திருமதி.பா. வளர்மதி, பாராளுமன்ற உறுப்பினர் திரு.எஸ்.ஆர்.விஜயகுமார், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.என். ரவி, திரு.ப.சத்திய நாராயணன், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் / கூடுதல் தலைமை செயலாளர் திரு. அசோக் டோங்ரே இஆப., மக்கள் நல்வாழ்வு மற்றும் சுகாதார துறை அரசு முதன்மை செயலாளர் டாக்டர் இராதாகிருஷ்ணன் இஆப., நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.கோ.பிரகாஷ் இஆப. பேரூராட்சிகளின் இயக்குநர் திரு.பழனிச்சாமி இஆப., தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் மகேஸ்வரன், இ.ஆ.ப. பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் (பொறுப்பு) திருமதி லலிதா இஆப., துணை ஆணையர்கள், மண்டல துணை ஆணையர்கள், முதன்மை தலைமைப் பொறியாளர் மற்றும் கண்காணிப்பு பொறியாளர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்புத் துறை இயக்குநர் டாக்டர்.குழந்தைசாமி, கண்காணிப்பு பொறியாளர்கள், நகராட்சி, பேரூராட்சி, குடிநிர் வழங்கல் துறை மற்றும் ஊராட்சி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**